DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | சாந்தி | Village | வெள்ளக்குட்டை |
| Father's Name | சிவராஜி | Taluk | வாணியம்பாடி |
| Age | 55 | Calling | செவிலியர் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **11.03.2026**

**E.P. No. 6 /2025 in OS.No.2/2014** **ம.சா.1** **01.29 PM – 01.38 PM**

**குறுக்கு விசாரணை –**

1. அசல் வழக்கில் நான் வாதி என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கை எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்றால் 2012 அல்லது 2013 ம் வருடம் இருக்கும். அசல் வழக்கில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்தேன் என தெரியுமா என்றால் தெரியும், என்னுடைய வீட்டை வாடகை விட்டு இருந்தேன், மீண்டும் கேட்டபோது வீட்டை எனக்கு விற்று விட்டீர்கள் என கூறிவிட்டார்கள் என்று சாட்சி கூறுகிறார்.

2. நான் அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 13.02.2006 முதல் சுதாகர் என்பவர் சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் ஆன சுதாகர் சுவாதிதனத்தில் இருந்தார் என்ற விவரத்தை அசல் வழக்கு தாக்கல் செய்யும் சமயம் எனது வக்கீல் இடம் நான் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல அவர் சுவாதீனத்தில் இருக்கிறார் என்பதை நான் தெரிவித்தேன். என்னுடைய வழக்கறிஞர் என்ன பரிகாரத்திற்காக அந்த அசல் வழக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் தெரியும் வீட்டை காலி செய்ய கோரி தாக்கல் செய்திருந்தார்.

3. நான் வீட்டை ரூபாய் 26,500 தொகைக்கு சுதாகர் என்பவருக்கு விற்று விட்டேன் என்று சொன்னால் சரியல்ல நான் விற்கவில்லை. நான் தாக்கல் செய்த அசல் வழக்கின் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பை வைத்து தான் இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பை ரத்து செய்யக்கோரி இந்த நிறைவேற்று மனுவின் எதிர்மனுதார சுதாகர் இதே நீதிமன்றத்தில் ஒரு மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான் எனக்கு தெரியும்.

4. இந்த நிறைவேற்ற மனுவை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்து உள்ளேன் என்றால் வீடு காலி செய்து எனக்கு கொடுக்க வேண்டும் என தகவல் செய்துள்ளேன். இந்த எதிர்மனுதாரர் அசல் வழக்கு எண் 15/2026 என எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் கூறும் வீட்டிற்கு சுதாகர் என்பவர் தான் சொத்து வரி கட்டி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, என்னுடைய சொத்தில் உள்ள வீட்டை இடித்து மானியம் வாங்கி கட்டிய வீட்டிற்கு தான் அவ்வாறு செலுத்து வருகிறார்.

5. வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் மூலம் இலவச வீடு வழங்கும் திட்டத்தின் மூலம் அனுமதி பெற்று தான் சுதாகர் வீட்டை கட்டினார் என்று சொன்னால் சரியல்ல. இந்த நிறைவேற்று மனுவில் கோரி உள்ள பரிகாரத்தை அசல் வழக்கில் நான் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல, நான் சரியாகத் தான் தாக்கல் செய்துள்ளேன். அசல் வழக்கில் கேட்டுள்ள பரிகாரத்தை நிறைவேற்ற மனுவில் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கில் கேட்காத பரிகாரத்தை கோரி தாக்கல் செய்த இந்த நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வாணியம்பாடி.